இடமளித்து அவர்களை உபயோகப்படுத்தி வந்தார்கள் என்று கூறியிருக்கிறார்கள். எந்தவிதமான முறையிலும் ஒப்பந்தம் செய்து கொண்டு யாரும் வேலைக்கு வைக்கப்படவில்லை என்ற விவரம் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. ஒப்பந்தம் செய்து கொண்டு, பாண்டெட் லேபர் என்ற முறையில் எந்த மாவட்டத்திலும் யாரும் வேலைக்கு வைத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : நீலகிரி மாவட்டத்தில் ஒப்பந்தக் கூலிகள் வைத்திருப்பதுபோல், தஞ்சை மாவட்டத்தில், பண்ணையாட்கள் என்ற முறையில் வைத்து இருந்தது போலவே, அவர்கள் வேலைக்கு வருவதற்கு முன்பே அவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு, அங்கே குடியிருந்துகொண்டு அவர்கள் எல்லா வேலைகளையும் செய்யவேண்டும், அவர்கள் நிர்ணயிக்கிற கூலிகளை இவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற பாரம்பரியம் இருக்கிறது. எனவே, அரசாங்கம் இவ்வளவுதான் குறைந்தபட்சக்கூலி இருக்கவேண்டும் என்று நிர்ணயித்து, அவர்கள் வாழ்க்கையில் சௌகரியமாக இருக்கவேண்டுமென்று கருதி, அதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பண்ணையாட்கள் சட்டம் வருவாய்த் துறையில் இன்னும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பண்ணையாட்கள் சட்டம் வேறு, பாண்டெட் லேபர் ஒப்பந்த முறை வேறு. மனிதனை அடிமையாக எழுதிக் கொடுத்து விட்டு வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிற முறை இப்பொழுது எங்கும் இல்லை என்றுதான் கூறினேன். மற்றபடி தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கூலிகளாக இருந்து, போதுமான கூலி இல்லாமல் இவ்வளவு தான் வாங்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தி வேலை வாங்குகின்ற முறை, அது வேறு.

திருவண்ணாமலையில் நெற்பயிர்களை அரிக்கும் பூச்சிகளைத் தடுக்கும் ஆராய்ச்சி நிலையம்.

*64 வினா—திரு. கே. சகாதேவக் கண்டர் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெற்பயிர்களை அரிக்கும் பூச்சிகளைத் தடுப்பதற்காக பூச்சிகளைத் தடுக்கும் ஆராய்ச்சி நிலையம் (Biolegical Control Centre) ஒன்று வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் ஏற்படுத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலையில் நெற்பயிற்களை அழிக்கும் பூச்சிகளைத் தடுக்கும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : திருவண்ணாமலை வட்டத்தில் சாத்தூர் அணைப் பகுதியில் சுமார் 20,000 ஏக்கர் நஞ்சைப் பயிர் செய்யப்படுகிறது. அந்தப் பயிர்களை அதிகமாக பூச்சி சாப்பிடுகிறது என்ற காரணத்தினால், 4, 5 முறை மருந்து அடிக்கப்படுகிறது.

அந்தப் பயிரை மாடு சாப்பிட்டால் மாடு சாகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் பரிசிலனை செய்ய ஒரு குழு அமைத்து மருந்தில் அதிக பாஷாணம் இல்லாமல் செய்வதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திரு வண்ணமலை வட்டத்தில் பயிர்களை அழிக்கின்ற பூச்சிகள் பொது வாக தஞ்சைப் பகுதியிலும் இருக்கின்றன. அதற்காக கோவை மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையிலும் ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. இதேவிதப் பூச்சிகள் அங்கு இருப்பதினால் இந்தப் பூச்சிக் கொல்லி மருந்து தயார் செய்வது பற்றி ஏற்கனவே ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதே பூச்சிக்கொல்லி மருந்து பற்றி ஆராய்ச்சி செய் வதற்கு ஒரு தனி நிலையம் தேவையில்லை என்று அரசாங்கம் கருது கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற ஒரு மாத காலத்தில் பூச்சி இருக்கிறதோ, இல்லையோ, இந்தப் பூச்சி அரிக்கிறது என்ற பெயரில் கடலைப் பயிர், நெற் பயிர் எல்லாவற்றிற்கும் ஒரு மாத காலமாக ஆகாய விமானத்திலிருந்து பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது என்பது தெரியுமா ? அதற்குக் கட்டணம் ஏதாவது வசூலிக்கப் போகிறீர்களா, இல்லையா ? அல்லது இலவசமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தி ஆகாயவிமானம் மூலம் பூச்சி மருந்து தெளித்துக்கொண்டு வருகிறோம். வட ஆற்காடு மாவட்டத்தில் எவ்வளவு ஏக்கருக்கு எந்தப் பயிர்களுக்கு எப்பொழுது தெளிப் போம் என்ற வகையிலே தனிக் கேள்வி போட்டால், அதற்கு உரிய பதில் தரப்படும்.

THIRU B. VENKATASWAMY : Is there any proposal to control the generation of pests themselves instead of spraying medicines?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பூச்சி களைக் கொல்வதற்காக பல வகையான முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. எனவே, அந்த வகையிலே ஆகாயவிமானம் மூலம் மருந்து தெளிப்பது, விசைக் கருவிகள் மூலம் மருந்து தெளிப்பது, கையால் மருந்து தூவுவது, மற்ற முறைகள் கையாளப்பட்டுவரு கின்றன. இது தவிர வேறு முறைப்படி செய்வதற்கு இப்பொழுது எந்தவிதமான உத்தேசமும் இல்லை.

கொடைக்கானலை சுற்றுலா மையமாக்கல்

*65 வினு—திரு. சு. துரைசாமி :
திரு. என். எஸ். வி. சித்தன் : } மாண்புமிகு வேளாண்மை அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

கொடைக்கானலை உல்லாச யாத்திரை இடமாக மாற்றும் திட்டம் ஏதேனும் தற்போது அரசின் பரிசிலனையிலுள்ளதா ?